விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–03.40 p.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 04.05 p.m.

# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.I, Mettur

## Case No : C.C. 246/2024

**Prosecution witness : அ.சா.1** **Date : 23.09.2024**

| | |
|---|---|
| **Name : சுரேஷ்குமார்** | **Taluk : சங்ககிரி** |
| **Father Name : முனுசாமி** | **Calling : வனச்சரக அலுவலர்** |
| **Village : சங்ககிரி** | **Age : 46** |

**(Both accused absent. Filed petition and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது சங்ககிரி சமூக காடுகள் வனசரகத்தில் வனசார அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 22.01.2024 ம் தேதி இரவு 08.00 மணியளவில் எனக்கு கிடைத்த தகவலின் பேரில் கொளத்தூர் அருகே கருங்கல்லூர் கிராமத்தில் மகேந்திரன் என்பவர் கருங்காலி மரங்களை வெட்டி விறகுகளாகவும் சிறு சிறு துகள்களாகவும் மகேந்திரனின் அக்கா நிலத்தில் கருங்காலி கட்டைகளை பாதுக்கி வைத்து தனது Bolero Pickup வாகனத்தில் வியபாரம் செய்வதாக கிடைத்த தகவலின் பேரில் இரவு 08.30 மணியயவில் ஈஸ்வரி என்பவரின் வீட்டின் அருகே சோதனை செய்யும் போது கருங்காலி கட்டைகளும், சிறு சிறு துகள்களும் ஒரு பாலீதின் கவர் போட்டு வைத்திருந்தனர்.

2) வீட்டின் உரிமையாளரான ஈஸ்வரி மற்றும் அவரின் மருமகள் கண்ணம்மா என்பவர்களை அழைத்து கருங்காலி கட்டை எப்படி வந்தது, யார் கொண்டு வந்தார்கள் என்றும் விசாரித்தேன். விசாரிக்கும்போது

ஈஸ்வரி எனது தம்பி மகேந்திரன் என்பவர் கொண்டு வந்து கருங்காலி கட்டைகளையும், துகள்களையும் வைத்து வியாபாரம் செய்து வருகிறார் என்று வாக்குமூலம் கொடுத்தார். அவரின் மருமகளை விசாரிக்கும்போது எனது கணவரின் தாய்மாமா மகேந்திரன் என்பவர் தான் கருங்காலி கட்டைகளையும், துகள்களையும் வைத்து வியாபாரம் செய்து வருகிறார் என்று வாக்குமூலம் கொடுத்தார். அவர்களிடம் மகேந்திரனின் கைப்பேசி எண்ணை வாங்கி அவருக்கு பீட் வனக்காப்பாளர் போன் செய்து சம்பவம் இடத்திற்கு வாருங்கள் உங்களிடம் விசாரணை செய்யவேண்டும் என்று சொன்னார். வருகிறேன் என்று கூறிவிட்டு வேகு நேரமாகியும் வரவில்லை. கருங்கல்லூர் பஞ்சாயத்து கிராம நிர்வாக அலுவலருக்கு போன் செய்து தகவல் தெரிவித்தோம்.

3) அந்த நேரத்தில் கருங்கல்லூர் முன்னால் பஞ்சாயத்து தலைவர் சின்னப்பன் அவர் தனது Bolero வாகனத்தில் சம்பவ இடத்திற்கு வந்தார். என்னிடம் என்ன என்று விசாரித்தார். நான் நடந்த சம்பவத்தை தெரிவித்தேன். அதற்கு அவர் இது ஒன்று பெரிய தப்பு கிடையாது. நீங்கள் இங்கு இருந்து கிழம்புகள் என்று சொன்னார். நான் மகேந்திரன் வருவதாக என்று சொல்லியுள்ளார் அதனால் அவரிடம் விசாரணை செய்ய வேண்டும் மற்றும் கருங்காலி கட்டைகளை மேட்டுர் வனசரக அலுவலகத்திற்கு மேற்படி விசாரணைக்காக எடுத்து செல்லவேண்டும் அதற்கு சின்னப்பன் ஒரு மயிரு புடுங்க முடியாது என்றும் முடிந்தால் விறகில் கை வைத்துப்பார், நீ எப்படி செல்கிறாய் என்று பார்ப்பேன் என்று என்னையும், என்னுடன் வந்த வனக்காப்பாளர் திரு. சதீஸ், பத்ரன், நல்லதம்பி, கோகுல கண்ணன் ஆகியோர்களை தகாத வார்த்தையால் திட்டியும், மிரட்டியும் அரசு பணியை செய்ய விடாமலும் தடுத்தார்.

4) அவருடன் வாகனாத்தை ஓட்டி வந்த பெயர் தெரியாத நபர் எங்களை கெட்ட வார்த்தையால் திட்டியும், அரசு பணி செய்ய விடாமல் தடுத்தும் மிரட்டாவும் செய்தார். நான் எனது உயர் அலுவலரான மாவட்ட வன அலுவலர் நடந்த விவரங்களை கைப்பேசி மூலம் தெரிவித்தேன். அவர் உடனே நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளிடம் தகவல் தெரிவித்து தங்களுக்கு பாதுகாப்பு வழங்க ஏற்பாடு செய்கிறேன் என்று கூறினார். சிறிது நேரத்தில் காவல் துணை கண்காணிப்பாளர் எனது கைப்பேசிக்கு தொடர்பு கொண்டு என்ன பிரச்சனை என்று என்னிடம் விசாரித்தார். நான் நடந்த விவரங்களை அவரிடம் கூறினேன். அவர் எந்த இடம், வழி மற்றும் முகவரியை கேட்டுக்கொண்டு எங்களுக்கு உடனே போலிஸ் டீம்யை அனுப்பி வைக்கிறேன் என்று கூறினார். அதற்கு மகேந்திரன் போலீஸ் வந்தாலும் ஒரு மயிறு புடுங்க முடியாது என்று கூறிவிட்டு அவர் வாகனத்தில் ஏறி சென்று விட்டார். சிறிது நேரத்தில் போலீஸ் வாகனத்தில் போலிசார் வந்தனர். என்னிடம் என்ன விவரம் என்று கேட்டு தெரிந்துக்கொண்டனர். பிறகு நாங்கள் பாதுகாப்பிற்கு இருக்கிறோம் நீங்கள் விறகுகளை வண்டியில் ஏற்றுங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் இரண்டு வாகனங்களில் விறகுகளை ஏற்றிக்கொண்டிருக்கும்போது கருங்கல்லூர் கிராம நிர்வாக அலுவலர் வந்துவிட்டார். அவர் முன்னிலையில் இரண்டு வாகனங்களில் விறகுகளை ஏற்றிக்கொண்டு சுமார் 02.00 மணியளவில் மேட்டுர் வனசரக அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தோம். மறுநாள் காலை கொளத்தூர் காவல் நிலையம் சென்று சின்னப்பன் என்பவர் மீது அவரின் வாகனத்தை ஓட்டி வந்த பெயர் தெரியாது நபர் மீதும் என்னை அரசு பணி செய்ய விடாமல் தடுத்தும், தகாத வார்த்தையால் திட்டியும், மிரட்டல் விடுத்தும் இருவர் மீதும்

தக்க நடவடிக்கைகள் எடுக்க காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். புகாரிலுள்ள உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். **(புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** எதிரி சின்னப்பனை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். இன்று அவர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. மற்றொரு நபரான அடையாளம் சொல்ல முடியுமா என்றால் பார்த்தால் என்னால் சொல்லமுடியும் அவரும் இன்று நீதிமன்றத்தில் இல்லை. போலிசார் இது சம்மந்தமாக விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை**

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**